அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. 15/94

எனது இல: 111/0266/2/68/(பொது)
எல்/எச்.எ

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07.
1994 ஏப்ரில் மாதம் 26 ஆந் திகதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

கடன்கள்/முற்பணம் - XXIV ஆம் அத்தியாயம் தாபன விதிக்கோவை

1991.11.20 ஆம் தேதிய 54/91 ஆம் இலக்க, 1992.01.31 ஆந் தேதிய 6/92ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளின் மீது உங்களின் கவனம் கோரப்படுகின்றது.

02. இச் சுற்றறிக்கைகள் மூலமாக அரசாங்க அலுவலர்களுக்குப் பின்வரும் இரு காரணங்களுக்காகக் கடன் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

1. கட்டட அமைவிடமொன்றை அல்லது வீட்டுச் சொத்தைக் கொள்வனவு செய்வதற்காக.

11. வீடொன்றைக் கட்டுவதற்காக/பூர்த்தி செய்வதற்காக.

03. தாபனக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 11ஆம் பிரிவின்படி வீடொன்றைக் கட்டுவதற்கான கட்டட அமைவிடமொன்றை அல்லது வீட்டுச் சொத்தைக் கொள்வனவு செய்வதற்காக ஆகக் கூட 02 ஆண்டுச்சம்பளக் கடனொன்றைப் பெற்றுள்ள அலுவலர்கள் அத்தகைய கடனைச் செலுத்தி முடியாதிருப்பினும் வீடொன்றைக் கட்டுவதற்காக/பூர்த்தி செய்வதற்காக 6/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின்படி 5 ஆண்டுச் சம்பளக் கடனின் எஞ்சியுள்ள தொகையைக் கடனாகப் பெற விண்ணப்பிக்க முடியுமெனத் தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

04. எவ்வாறாயினும் XXIV ஆம் அத்தியாயத்தின் 11ஆம் பிரிவின்படி 02ஆண்டுக் கடனைப் பெற்றுள்ள அலுவலர்கள் அக்கடனைப் பயன்படுத்திக் கொள்வனவு செய்த அமைவிடத்தில் வீடொன்றை நிருமாணிக்கும்/பூர்த்தி செய்யும் சந்தர்ப்பத்தில் மட்டும் அவர்களுக்கு எஞ்சிய கடனைப் பெற்றுக் கொள்ள முடியும். ---

-05 ஆண்டுகளுக்கான கடன்களில் எஞ்சிய பகுதியைக் கருதப்படாது, விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படும் மதிப்பீட்டின்படி வேறொரு கடனாக வழங்க முடிவதுடன், மீண்டும் அறவிடும்போது இரு கடன்களையும் ஒன்று சேர்த்தோ வெவ்வேறாகவோ அறவிடுதல் வேண்டும்.

05. வீடொன்றைப் பூர்த்தி செய்வதற்கான கடன் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள வேலை மதிப்பீட்டின்படி இற்றைவரைக்கும் பூர்த்தி செய்யப்படாத வேலைகளுக்கு மட்டும் கடன் வழங்க வேண்டும்.

06. 1992.01.31 ஆந் திகதிய 6/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கானஅமைப்புப் படங்களும் மதிப்பீடுகளும் பட்டயம் பெற்ற கட்டிடக் கலைஞர் ஒருவர் அல்லது சிவில் பொறியியலாளர் ஒருவரிடமிருந்தும் பெற்றுக் கொள்ள முடியும்.

07. வாழ்க்கைத் துணைவருக்குச் சொந்தமான ஓர் இடத்தில் வீடொன்றைக்கட்ட/கட்டப்படும் வீடொன்றின் வேலையைப் பூர்த்தி செய்யக் கடன் வழங்கப்பட மாட்டாது.

08. இக் கடன் வழங்கப்படும்போது முற்பணக் கணக்கின் எல்லைகள் மீறப்படாதிருப்பதற்கான பொறுப்பைத் திணைக்களத் தலைவர்களும் செயலாளர்களும் ஏற்க வேண்டும்.

09. இச் சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் ஒருங்கிசைவுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்: வை. பீ. பல்லேதெனிய,
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு,